Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 82 | வெள்ளிக்கிழமை Friday | 23.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# “பகுதிநேர ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்”

## சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உறுதி



சென்னை: "பகுதிநேர ஆசிரியர்களின் போராட்டங்களை நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை. நிச்சயமாக அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றப்படும்" என சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையின் 3-வது நாள் கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் பேரவை உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு துறையின் அமைச்சர்கள் பதில் அளித்தனர்.அந்த வகையில் அதிமுக எம்எல்ஏ தங்கமணி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம் குறித்து கேள்வி எழுப்பினார். இதற்கு முதல்வர் ஸ்டாலின் பதில் அளித்தார்.

அப்போது அவர் பேசும்போது, "அரசு ஊழியர்கள் போராடிக் கொண்டிருப்பதை மிகுந்த கவலையோடு, வருத்தத்தோடு, அக்கறையோடு உறுப்பினர் தங்கமணி இங்கே குறிப்பிட்டிருக்கிறார். இந்த அக்கறை உங்கள் ஆட்சியில் ஏன் இல்லை? ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், திராவிட மாடல் ஆட்சியைப் பொறுத்தவரையில், அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை, அவர்கள் ஏதாவது கோரிக்கை வைத்து போராடுவது அவர்களின் உரிமை.

ஆனால், உரிமையோடு போராடக்கூடிய அந்த போராட்டத்தைக்கூட முடிக்க வேண்டும், அது தொடரக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடு தொடர்ந்து அமைச்சர் பெருமக்கள், அவர்களைஎத்தனையோ முறை அழைத்து பேசி, அதை எல்லாம் முழுக்க தீர்க்கவில்லை என்று சொன்னாலும் 95 முதல் 99 சதவிகிதம் தீர்த்து வைத்திருக்கிறோம்.

ஆனால், நாங்கள் TESMA கொண்டுவரவில்லை, ESMA கொண்டுவரவில்லை.இரவோடு இரவாக அவர்களைப்போய் கைது செய்யவில்லை.கொண்டுபோய் ஜெயிலில் அடைக்கவில்லை. இதெல்லாம் கடந்த கால அதிமுக ஆட்சியில் நடந்தது. எங்கள் ஆட்சியில் இல்லை.

இப்போதும் சொல்கிறேன். நாங்கள் அரசு ஊழியர்களுடைய போராட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். அதுமட்டுமல்ல, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக் கூடியவர், முதலமைச்சராக இருந்தபோது அரசு ஊழியர்கள் எந்தெந்த வகையில் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் கொச்சைப்படுத்தி பேசியதைஎல்லாம் இந்த நாடு மறந்துவிடவில்லை என்பதையும் உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

3 ஆண்டு கால பிரச்சினையை நாங்கள் தீர்த்து வைத்திருக்கிறோம். தீர்த்து வைத்ததுடன் அரசு ஊழியர் சங்கங்கங்களைச் சார்ந்த பொறுப்பாளர்கள் எல்லாம் கோட்டையில் இருக்கக்கூடிய முதலமைச்சர் அறைக்கு வந்து இதுவரை வரலாற்றில் இல்லாத அளவிற்கு முதலமைச்சர் அறைக்குள்ளேயே வந்து எனக்கு இனிப்பு ஊட்டியது, நான் அவர்களுக்கு இனிப்பு ஊட்டிய காட்சி எல்லாம் நீங்கள் தொலைக்காட்சியிலே பார்த்திருப்பீர்கள்.பத்திரிகைகளிலும் பார்த்திருப்பீர்கள். அவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள்.

அந்த மகிழ்ச்சி உங்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் எதையும் செய்யவில்லை, எதையும் செய்யவில்லை என்று திருப்பி திருப்பி சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.நீங்கள் செய்யவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதுதான் நான் வைக்கக்கூடிய கோரிக்கை.

இன்னும் சில பிரச்சினைகள் இருக்கின்றன. நான் முழுவதையும், நூற்றுக்கு நூறையும் நிறைவேற்றிவிட்டேன் என்று சொல்லவில்லை. இன்னும் ஒன்றிரெண்டு சதவீதம் இருக்கிறது. சத்துணவு அமைப்பாளர்கள், அதேபோன்று அங்கன்வாடி அமைப்பாளர்கள் இவர்களையெல்லாம்கூட அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

பகுதிநேர ஆசிரியர்களும் ஒரு பக்கத்திலே போராடிக்கொண்டிருக்கிறார்கள். போராட்டங்கள் பல இடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அவற்றையெல்லாம் நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை.

அவர்களையெல்லாம் அவ்வப்போது அழைத்துப்பேசி,அவர்களுடைய கோரிக்கையை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும் என்பதை சிந்தித்து,நிச்சயம் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், அந்தக் கோரிக்கைகளும் நிச்சயமாக நிறைவேற்ற ப்படும். அதில் எந்த கவலையும் பட வேண்டாம். அடுத்த ஆட்சி திராவிட மாடல் ஆட்சிதான் என்பதைஉறுதியுடன்சொல்கிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# மற்றவர்களின் தேர்தல் அறிக்கையை காப்பியடிக்க வேண்டிய அவசியமில்லை

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேட்டி



சென்னை: "கறிக்கோழிவிவகாரம்குறித்து பேச சட்டப்பேரவையில் அனுமதிக்கவில்லை, திமுக அரசு சர்வாதிகாரப் போக்குடன் நடந்து கொள்கிறது" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கறிக்கோழி விவகாரம் தொடர்பாக அதிமுக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தது. பின்னர் இந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை எடுக்க வலியுறுத்தி சட்டப்பேரவையில் அதிமுக எம்எல்ஏக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

ஆனால் முதல்வர் ஸ்டாலின், "கறிக்கோழி விவகாரம் குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அமைச்சர்களிடம் கலந்தாலோசித்த பிறகு, இது குறித்து நாளை விவாதிக்கலாம்" என்றார். இதனை ஏற்காத அதிமுகவினர் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு, வெளிநடப்பு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களிடம் பேசும்போது, "மூலப்பொருட்கள் விலை உயர்வால் கறிக்கோழி பண்ணையில் பணிபுரியும் 5 லட்சம் தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கறிக்கோழி வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு கூலி உயர்வு வழங்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கறிக்கோழி விவகாரம் குறித்து பேச அனுமதிக்கவில்லை, திமுக அரசாங்கம் சர்வாதிகார போக்குடன் நடந்து கொள்கிறது.

இது 40 ஆயிரம் விவசாய குடும்பங்களின் பிரச்சினை, 5 லட்சம் தொழிலாளர்களின் பிரச்சினை. மக்களின் பிரச்சினையை அரசின் கவனத்துக்கு கொண்டுவர கூட அனுமதி மறுத்தால் என்ன செய்வது? அரசாங்கம் இரு தரப்பிலும் பேசி சுமூகமான தீர்வு காண வேண்டும்.

அதேபோல், திமுக பொறுப்பேற்றதிலிருந்து கொசு உற்பத்தியாவதை தடுப்பதில் கவனம் செலுத்தவில்லை. கொசுவினால்தான் பல்வேறு நோய்கள் மக்களை தாக்குகிறது. தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், தென்காசி, தேனி, கடலூர், அரியலூர் உட்பட பல மாவட்டங்களில்சிக்கன்குனியா ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனிவார்டுகள் அமைத்து சிகிச்சை வழங்க வேண்டும்.

சிக்கன் குனியா ஏற்பட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் சூழல் அமையும். இது குறித்து தான் பூஜ்ஜிய நேரத்தில் பேச அனுமதி கேட்டோம். ஆனால் அனுமதி மறுத்து விட்டனர், அதனால்தான் வெளிநடப்பு செய்தோம்.

அதிமுகவின் தேர்தல் அறிக்கை மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்றுள்ளது. அந்த எரிச்சலில்தான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு விதமாக பதிலளித்து வருகிறார்கள். மாணவர்களின் வாக்குகளை பெறுவதற்கு தான் லேப்டாப் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

மாணவர்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என அவர்கள் நினைத்திருந்தால், கல்லூரி துவங்குவதற்கு முன்பே அவர்கள் லேப்டாப் கொடுத்திருக்க வேண்டும்.

திமுக ஆட்சி அமைந்ததிலிருந்து சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது. இதற்கு முழுக்க முழுக்க காரணம் போதைப் பொருள் விற்பனை தான். அதை தடுக்க இயலாத அரசாக உள்ளது. இத்தனை நிகழ்வுகள் நடைபெறுவதெல்லாம் போதை ஆசாமிகளால் தான். அதுவும் கஞ்சா போதை ஆசாமிகளால் தான். 20 நாட்களில் 46 போக்சோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் பெண்களும், சிறுமிகளும் பாதிக்கப்படுகிறார்கள். அதை கட்டுப்படுத்த இந்த அரசால் முடியவில்லை. இதற்கு காரணம் நிரந்தர சட்ட ஒழுங்கு டிஜிபி நியமிக்கப்படாதது தான். அதிமுக ஆட்சியில் பல்வேறு போராட்டங்கள் நடந்தன. திமுகவை போன்று அடக்கமுறை எங்களது ஆட்சியில் இல்லை.

தற்போது எதிர்கட்சிகள் போராட்டம் நடத்தினாலும், அனுமதி கொடுப்பதில்லை. அப்படி போராடினாலும் எங்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் இருப்பதால் விவசாயிகளில் இருந்து அனைவரும் போராடி வருகிறார்கள். ஆறு மாதமாக போராட்டங்கள் நடைபெறுகிறது. இது அரசாங்கத்துக்கு தெரியாதா? இந்த ஆட்சி அகற்றப்பட வேண்டிய ஆட்சி. போராடுபவர்களை திமுக ஒடுக்கப் பார்க்கிறது" இவ்வாறு இபிஎஸ் தெரிவித்தார்.

# விஜய்யின் தவெகவுக்கு விசில் சின்னம் தேர்தல் ஆணையம் ஒதுக்கியது





சென்னை: வரும் சட்டப்பேரவைத் தேர்தலுக்காக தமிழக வெற்றிக் கழகத்துக்கு விசில் சின்னத்தை ஒதுக்கி இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. சட்டப்பேரவைத் தேர்தல் வரும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை முன்னிட்டு, அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றன. தேர்தலில் முதன்முறையாக போட்டியிட உள்ள தமிழக வெற்றிக் கழகம் சார்பில், சின்னம் ஒதுக்கீடு செய்யக் கோரி இந்திய தேர்தல் ஆணையத்தில் வேண்டுகோள் வைக்கப்பட்டிருந்தது , அக்கட்சிக்கு விசில் சின்னம் ஒதுக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தமிழகத்தின் 234 சட்டப்பேரவைத் தொகுதிக்கும் ஒரே பொது சின்னமாக விசில் சின்னத்தை தேர்தல் ஆணையம் ஒதுக்கியுள்ளது. அதேநேரத்தில், அங்கீகாரம் பெறாத, பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி என்பதால், இந்த சின்னம் 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

சின்னம் ஒதுக்கீடு குறித்து கருத்து தெரிவித்துள்ள தவெகவின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகப் பிரிவின் துணைப் பொதுச்செயலாளர் சி.டி. ஆர்.நிர்மல்குமார், "தமிழகவெற்றிக்கழகம்சார்பில் இந்திய தேர்தல் ஆணையத்திடம் சின்னம் கேட்டு விண்ணப்பத்திருந்தோம். விண்ணப்ப படிவத்தில் 10 சின்னங்களை பரிந்துரைத்திருந்தோம். முதல் சின்னமாக விசில் சின்னத்தை தலைவர் விஜய் கேட்டிருந்தார். எங்கள் தலைவருக்கு பிடித்த விசில் சின்னமே ஒதுக்கப்பட்டுள்ளது. இது எங்கள் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான தருணம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், கமல் ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு டார்ச்லைட் சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.டார்ச்லைட் சின்னமும் 234 தொகுதிகளுக்கும்பொது சின்னமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஈரோடு மாவட்டத்தில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா

## 25,27 ஆகிய இரண்டு நாட்கள் அனைத்து வட்டாரத்திலும் நடைபெறவுள்ளது

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு-



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஈரோடு மாவட்டம்முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா, இது நம்ம ஆட்டம் - 2026 வட்டார அளவிலான விளையாட்டுபோட்டிகள்வரும் 25.01.2026 மற்றும் 27.01.2026ஆகியஇரண்டு நாட்கள் அனைத்து வட்டாரத்திலும் நடைபெறவுள்ளது.

இதில் 25.01.2026 அன்று 1.ஈரோடு வட்டாரத்தில் வ.உ.சி பூங்கா விளையாட்டு அரங்கில் தடகளம்,கேரம்,கையுந்துபந்து விளையாட்டுகளும், காமராஜ் ஆண்கள்மேல்நிலைப்பள்ளியில் கிரிக்கெட் விளையாட்டு போட்டிகளும் நடைபெறும். 2. அம்மபோட்டை வட்டராத்தில் அரசுமேல்நிலைப்பள்ளி குப்புச்சிபாளையம் பள்ளியில்கிரிக்கெட்விளையாட்டும், செயின்ட் இக்னேஷியஸ் மேல்நிலைப் பள்ளி, பூதப்பாடியில் தடகளம், கேரம், கையுந்துபந்து விளையாட்டுகளும் நடைபெறும். 3. பெருந்துறை, வட்டாரத்தில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெருந்துறை 4.மொடக்குறிச்சி, வட்டாரத்தில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, மொடக்குறிச்சி, 5.சென்னிமலை வட்டாரத்தில்கொமரப்பாசெங்குந்தர் மேல்நிலைப் பள்ளி, சென்னிமலை, 6. பவானி வட்டாரத்தில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பவானி, 7.தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் அரசு மேல்நிலைப் பள்ளி, பங்களபுதூர், 8. சத்தியமங்கலம் வட்டாரத்தில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, சத்தி, 9.நம்பியூர் வட்டாரத்தில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர், 10.தாளவாடி வட்டராத்தில் அரசு மேல்நிலைப் பள்ளி, தாளவாடி, 11.கொடுமுடி வட்டாரத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி சாலைபுதூர், 12.கோபி-செட்டிபாளையம்,வட்டராத்தில் வைரவிழா மேல்நிலைப் பள்ளி கோபி, 13.பவானிசாகர் வட்டாரத்தில் கே.வி.கே அரசு மேல்நிலைப் பள்ளி, புஞ்சைபுயின ம்பட்டி, 14.அந்தியூர், வட்டாரத்தில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அந்தியூர் ஆகிய வட்டாரங்களில் 25.01.2026 அன்று கிரிக்கெட், தடகளம், கேரம், கையுந்துபந்து விளையாட்டு போட்டிகளும் 27.01.2026 அன்று எறிபந்து, கயிறு இழுத்தல், கபாடி ஆகிய விளையாட்டு போட்டிகளும் நடைபெறும். 16 வயது முதல் 35 வயது வரை உள்ள விளையாட்டு வீரர்கள் அனைவரும் பங்கு பெறலாம்.

இதில் வெற்றி பெறும் வீரர்களுக்கு முதல் பரிசாக ரூ.3000/-, இரண்டாம் பரிசாக ரூ.2000/-மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.1000/- வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு மாவட்ட விளையாட்டு அலுவலர், ரா.சதீஷ்குமார், 7401703490 என்ற எண்ணில்தொடர்புகொள்ளலாம்.

இந்த வாய்ப்பினை பயன்படுத்தி மாவட்ட மற்றும் மாநில அளவில் சாதனை படைத்திட வேண்டுமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.



கோவையை சேர்ந்த சிறுதுளி அமைப்பின் நீர் மேலாண்மை பணிகளுக்கு

# முதலமைச்சஸ்ர் மு.க.ஸ்டாலின் சான்றிதழ் வழங்கி பெருமை படுத்தி உள்ளார்


## இனி சென்னையிலும் நீர் மேலாண்மை பணிகள் துவங்க உள்ளதாக தகவல்...

நீர் பாதுகாப்பு துறையில் செயல்பட்டு வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான சிறுதுளி, அமைப்பு சார்பாக கோவை உக்கடம் பகுதியில் செய்தியாளர்சந்திப்பு நடைபெற்றது. அப்பொழுது செய்தியாளர்களை சந்தித்து பேசிய சிறுதுளி அமைப்பின் நிர்வாக அறங்காவலர்வனிதா மோகன் கூறியதாவது.. சிறுதுளி, அமைப்பு தனது 22 ஆண்டுகால பயணத்தில், கோவையில் 10 லட்சம் மரங்களை நட்டு உள்ளதாகவும், 2026 ஆம்ஆண்டில்மாநகராட்சியின் திட்டங்களைசெயல்படுத்தும் வகையில், கோவையில் பல்வேறு பகுதிகளில் ஒரு லட்சம் மரங்களை, நட இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் சிறுதுளி அமைப்பு, இந்து சமய அறநிலைத்துறையுடன் இணைந்து கோவில் நிலங்களை, சுற்று சூழல் மறு சீரமைப்புக்கு பயன்படுத்தும் எனவும், சிறுதுளி அமைப்பின் சார்பாக இனி சென்னையிலும், தனது பணிகளை தொடங்க உள்ளதாகவும், இதற்காக முதற்கட்டமாக சோளிங்கநல்லூரில்அமைந்துள்ள ஒடைக்கேணி வண்ணாங்குளத்தை மீட்டெடுக்கும் பணியில் உள்ளதாகவும் அதன் கொள்ளளவை, 19 மில்லியன் லிட்டராக உயர்த்துவதே இதன் நோக்கமாக உள்ளது என்றும் தெரிவித்தார். இத்தகைய செயலை எங்களுக்கு அளித்த தமிழக அரசுக்கு நாங்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும், எங்களது பணிகளை ஆழமாக புரிந்து கொண்ட தமிழக அரசு,நீர் நிலைகளில் பணியாற்றுவதற்கும், அவற்றை மீட்டெடுப்பதற்கும் எங்களுக்கு அதிகாரப்பூர்வ அனுமதியை வழங்கியுள்ளதாக தெரிவித்தார். மேலும் சிறுதுளி அமைப்பின், தொடர்ச்சியான முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில், தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின், கடந்த திங்கட்கிழமை அன்று சென்னையில் நடைபெற்ற ஒரு விழாவில், மாநில அளவிலான விருதை வழங்கி பெருமைப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார் மேலும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், வைல்ட் தமிழ்நாடு எனும் ஆவணப்படத்தை, வரும் ஜனவரி 26ம் தேதி, பிஎஸ்ஜி கல்லூரியில் திரையிட உள்ளதாகவும் தெரிவித்தார். இந்த செய்தியாளர்கள் சந்திப்பின் பொழுது சிறுதுளி அமைப்பின் அறங்காவலர் சதிஷ், குழு உறுப்பினர் சந்திரசேகர், சுஜனி பாலு, சிறுதுளி தலைமை செயல்பாட்டு அதிகாரி சின்னச்சாமி உடனிருந்தனர்.

மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு 2027, 2030 ஆம் வருடத்திற்குள்

# தொழுநோய் பரவலை முற்றிலும் ஒழித்திட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது

## ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தகவல்




மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு 2027-2030 ஆம் வருடத்திற்குள் தொழுநோய் பரவலை முற்றிலும் ஒழித்திட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன்படி ஈரோடு மாவட்டத்தில் 2024-25 ஆம்ஆண்டில் முதல் நிலை ஊனத்துடன் புதிய நோயாளிகள் மற்றும் குழந்தை நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்ட 8 வட்டாரங்கள் மற்றும் 1 நகர் புரம், 1.ஜம்பை, 2.குருவரெட்டியூர், 3.சிறுவலூர், 4. திங்களூர் 5. சென்னிமலை 6. சிவகிரி 7.புளியம்பட்டி 8.சித்தோடு மற்றும் 1.சத்தியமங்கலம் நகர் புரம். ஆகிய வட்டாரங்களில் நேரடி தொழுநோய் கண்டுப்பிடிப்பு முகாம் 06.02.2026 அன்று வரை நடைபெற உள்ளது. இப்பணியில் 986 முன்களப்பணியாளர்களும், 97 மேற்பார்வையாளர்களும் ஈடுபட உள்ளார்கள். இவர்கள் வீடு வீடாக நேரில் சென்று ஆண்களை ஆண் முன்களப்பணியாளர்களும் பெண்களை பெண்முன்களப் பணியாளர்களும் தொழுநோய்க்கான பரிசோதனை செய்வார்கள்.

தொழுநோய் ஆரம்ப அறிகுறிகள் : தோலில் சிவந்த (ம) வெளிர்ந்த உணர்ச்சியற்ற

தேமல்,தோல் தடித்து காணப்படுதல், தோல் பளபளப்பாக(அ)எண்ணெய்பூசியது போல் இருத்தல், தோலின் மேல் சிறு முடிச்சு போன்ற கட்டிகள், உணர்ச்சியற்ற தேமலில் முடி உதிர்தல், கண் இமைகள் மூட முடியாத நிலை, கண்களில் புண்கள்/ கருவிழியில் வெண்மையாக இருத்தல், மூக்கு சப்பையாக இருத்தல், காது மடல் தடித்திருத்தல், கை/ கால்- விரல்கள் மடங்கி இருத்தல், கை / கால் பாதம்-புண் இருத்தல், கை/ கால் பாதம்-தளர்ச்சி (மணிக்கட்டு/பாதம் தொங்கி இருத்தல்). கை/கால் பாதம்-கூச்ச உணர்வு/மதமதப்பு,/உணர்ச்சி இல்லாமை./தசை பலவீனம்/ குளிர்ச்சி/சூடு அறியாத தன்மை,கை / கால் பொருள்களை எடுக்கவோ பிடிக்கவோ இயலாமை நடக்கும்போது காலணிகள் கழன்று போதல், சட்டை/ரவிக்கை பொத்தான் போட இயலாமை,முழங்கையில் காப்பு காய்த்தல்/புண், ஒரு கால் பாதத்தில் மட்டும் பனி வெடிப்பு.

மேற்கண்ட அறிகுறிகள் இருப்பவர்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டு, மருத்துவர்களால் உறுதி செய்த பின்பு, நோயின் தன்மைக்கேற்ப 6 மாதம் முதல் 1 வருடம் வரை முழுமையாகசிகிச்சைஎடுத்துக்கொள்ளவேண்டும்.

தொழுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதன் மூலம் முழுமையாக குணப்படுத்தவும், ஊனங்களை தடுக்கவும் முடியும். மேலும் புதியதாக கண்டுபிடிக்கப்படும் தொழுநோயாளிகளின் உடன் இருப்பவர்கள் அருகில் வசிப்பவர்கள்,உடன்பணிபுரிபவர்கள் ஆகியோருக்கு தொழுநோய் தடுப்பு மருந்து வழங்கப்படும். இதனால் மற்றவர்களுக்கு தொழுநோய் பரவாமல் தடுக்க முடியும்.



ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் (21.01.2026) நேற்று நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டத்தில் மனு கொடுக்க வந்த பொதுமக்களிடம் இருந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா, பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று மனு மீது விசாரணையை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

ஈரோடு மாவட்டம், அந்தியூர் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கிணத்தடி என்ற ஊரில்

# காணாமல் போன அரசு பழங்குடியினர் உண்டுஉறைவிட பள்ளி குழந்தைகள் கண்டுபிடிப்பு



ஈரோடு மாவட்டம், அந்தியூர் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கிணத்தடி என்ற ஊரில் இயங்கி வரும் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளியில் 34 குழந்தைகள் தங்கி படித்து வருகின்றனர். (21.01.2026) அன்று காலை 6 மணிக்கு மேற்படி பள்ளியில் தங்கி படித்து வந்த 1-ம் வகுப்பு ஒருவரும், 4-ம் வகுப்பு ஒருவரும், 6-ம் வகுப்பு மூன்று பேரும் மற்றும் 7-ம் வகுப்பு இரண்டு பேரும்மொத்தம்7பள்ளி குழந்தைகள் பள்ளி நிர்வாகத்தினருக்குத் தெரியாமல் பள்ளியை விட்டு காணாமல் போய்விட்டதாக பள்ளியின் சத்துணவு அமைப்பாளர் சக்திவேல் என்பவர் கொடுத்த புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.காணாமல்போன பள்ளிக் குழந்தைகளை கண்டுபிடிக்க தனிப்படைகள் அமைக்கப்பட்டு, தேடப்பட்டு வந்த நிலையில், நான்கு குழந்தைகளை வெள்ளித்திருப்பூர் காவல் நிலைய சரகம், காக்காயனூர் கிராமத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டனர். அதேபோல், மூன்று குழந்தைகளை கருங்கரடு வனப்பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டனர். கண்டுபிடிக்கப்பட்ட குழந்தைகளை விசாரித்த போது பெற்றோர்களின் ஞாபகம் காரணமாக பள்ளி நிர்வாகத்திற்கு தெரியாமல் வெளியேறி விட்டனர் என்று கூறியுள்ளனர்.

காணாமல் போன குழந்தைகளை கண்டுபிடிக்கதுரிதநடவடிக்கை எடுத்த P.M.தங்கவேல், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், CWC ஈரோடு மற்றும் பவானி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையிலான குழுவினரையும் மற்றும் கண்டுபிடிக்க உதவிய பொதுமக்களையும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா பாராட்டினார் என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது

# கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான 10 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை மீட்டதுடன், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த சொகுசு மதில் சுவர்களையும் மாநகராட்சி அதிகாரிகள் தரைமட்டமாக்கினர்





கோவை சரவணம்பட்டி,மீனாட்சி நகர் பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான 50 சென்ட் 'ரிசர்வ் சைட்' நிலம் உள்ளது.இந்தநிலத்தை அந்தப் பகுதியைச் சேர்ந்தநபரானசிவஞானம் என்பவர் சட்டவிரோதமாக ஆக்கிரமித்திருந்தார். அரசு நிலத்தைச் சுற்றி பிரம்மாண்ட மதில் சுவர் எழுப்பி,அதனைத்தனது வீட்டின் ஒரு பகுதியாக மாற்றி, உள்ளே ஒரு சொகுசு பூங்காவையும் அமைத்திருந்தார்.

சிவஞானம் தன்னை ஒரு செல்வாக்குமிக்க அரசியல் பிரமுகராக அந்தப் பகுதியில் காட்டிக்கொண்டுள்ளார். அதிகாரிகள் ஆய்வுக்கு வரும்போதெல்லாம், கட்சி மேலிடத்தில் தனக்கு நெருக்கமான தொடர்பு இருப்பதாகக் கூறி மிரட்டி வந்துள்ளார்.

குறிப்பாக குருவாயூர் கோவிலுக்குத் தங்கக் கிரீடம் வழங்க ஏற்பாடு செய்ததே நான் தான்" என்றும் கூறி அதிகாரிகளை நிலைகுலைய வைத்துள்ளார். இந்த நிலையில் மாநகராட்சி சொத்துகள் பற்றி அறிந்த

மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் யார் என்ன சொன்னாலும் அதிகாரிகள் அடி பணிய கூடாது. அவை அரசின் சொத்துக்கள் ஆக்கிரமிப்புக்கு துணை போக கூடாது என அதிரடி உத்தரவிட்டார். இதனை தொடர்ந்து பலத்த போலீஸ் பாதுகாப்புடன் மாநகராட்சி ஊழியர்கள் சம்பவ இடத்திற்கு வந்தனர். பிரம்மாண்ட ஜே.சி.பி எந்திரம் கொண்டு, பல ஆண்டுகளாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த மதில் சுவர்கள்மற்றும்நுழைவு வாயிலை இடித்து தள்ளினர். சுமார் 10 கோடி ரூபாய் மதிப்புள்ள 50 சென்ட் நிலம் மீட்கப்பட்டு, உடனடியாககம்பிவேலிஅமைக்கப்பட்டது. "இது மாநகராட்சிக்குச் சொந்தமான இடம்" என்ற அறிவிப்புப் பலகை நடப்பட்டது.

அரசியல்பெயரையோ, மேலிடத்துத் தொடர்பையோ சொல்லி அரசு நிலத்தை அபகரிப்பவர்கள் மீது எவ்வித பாரபட்சமுமின்றி நடவடிக்கை எடுக்கப்படும். ஆக்கிரமிப்பாளர்கள் யாராக இருந்தாலும் சட்டம் தன் கடமையைச் செய்யும்," என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள சம்பவம் கோவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



ஈரோடு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா தலைமையில் [21.01.2026] அன்று மாவட்டக் காவல் அலுவலகத்தில் நீதித்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் வழக்குரைஞர்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது.



ஈரோடு மாவட்டம் காலிங்கராயன்பாளையத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில், பாஜக விவசாய அணி மாநில தலைவர் நாகராஜ் அவர்களுக்கு, ஈரோடு தெற்கு மாவட்ட விவசாய அணி ஒன்றிய செயலாளர் ஆறுமுகம் பேக்கரி முருகானந்தம் நன்றி தெரிவித்தார். சமீபத்தில் ஈரோட்டில் நடைபெற்ற விவசாய அணி விழிப்புணர்வு மாநாடு மிகச்சிறப்பாக அமைந்ததற்காகவும், அதில் பங்கேற்று சிறப்பித்த அனைவருக்கும் இக்கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

# மதுராந்தகத்தில் N.D.A. கூட்டனி சார்பில் பாரதப் பிரதமர் மோடி கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம்

## 3500 க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்



மதுராந்தகம் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் பாரதப் பிரதமர் கலந்து கொள்ளும் மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு ஏழு அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தகவல் பொதுமக்கள் வரும் வாகனங்களை நிறுத்த 10 இடங்களில் கார் பார்க்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் மோடியை வரவேற்கும் வகையில் பேனர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் கொடிகள் நடப்பட்டு உள்ளது

தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அதிமுக தலைமையில் உருவாகியுள்ள தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டம் நாளை செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நடைபெற உள்ளது. இதற்கான மேடை அமைக்கும் பணிகள் மதுராந்தகத்தில் திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலை ஒட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுமார் 35 ஏக்கர் பரப்பளவில், பிரதமர் மோடி பங்கேற்கும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. சென்னை விமான நிலையத்திலிருந்து ஹெலிகாப்டர் மூலம் வரும், பிரதமர் மோடி ஹெலிகாப்டர் தரை இறங்குவதற்காக 12 ஏக்கர் பரப்பளவில் எலிபேட் அமைக்கப்பட்டுள்ளது

தேர்தலுக்கு முன்பாக நடைபெறக்கூடிய மிக முக்கிய பொதுக்கூட்டம் என்பதால், இந்த கூட்டத்தில் பிரதமர் மோடி, பாஜக தலைவர்கள், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ஜி. கே.வாசன், அமமுக டிடிவி தினகரன், ஜான்பாண்டியன், ஏ.சி.சண்முகம், ஜெகன் மூர்த்தி உள்ளிட்ட ஏராளமான கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இதற்காக பிரதமர் மோடியின் சிறப்பு பாதுகாப்பு படை பிரிவு அதிகாரிகள் மற்றும் தமிழக காவல்துறையினர் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

அனைத்து கூட்டணி கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ளக்கூடிய கூட்டம் என்பதால், கூட்டணி கட்சி தொண்டர்களும் இந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளனர். குறிப்பாக அதிமுக, பாமக, பாஜக உள்ளிட்ட கட்சிகளின் தொண்டர்கள் அதிக அளவு இந்த பொதுக்கூட்டத்தில், கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் மோடி பங்கேற்கும் பொதுக்கூட்டத்திற்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தமிழக காவல்துறை வழக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க் தலைமையில் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து சுமார் 3500 க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். பிரதமர் மோடி வருகை முன்னிட்டு 7 அடுக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட உள்ளது. சுமார் பத்து இடங்களில் வாகனம் நிறுத்துவதற்கான பார்க்கிங் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் வாகனம் நிறுத்துவதற்கான தனி பார்க்கிங் மற்றும் முக்கிய தலைவர்கள் வாகன நிறுத்துவதற்கான விஐபி கார் பார்க்கிங் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

ஒரு லட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாற்காலிகள் போடப்பட்டுள்ளன. சுமார் 200க்கும் மேற்பட்ட கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று 200க்கும் மேற்பட்ட மொபைல் டாய்லெட் வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. மேலும் கூட்டணி கட்சிகள் சார்பில் பிரதமர் மோடியை வரவேற்கும் வகையில் பேனர்கள் வைக்கும் பணிகளும் வேகமாக நடைபெற்று வருகிறது.

# மதுராந்தகத்தில் தேசிய ஜனநாயக கூட்டடணி சார்பில் பொதுக்கூட்டம்

## பிரதமர் மோடி பங்கேற்பு ஹெலிகாப்டர் ரோந்து தீவிரம்



மதுராந்தகம் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் தேசிய ஜனநாயக கூட்டனி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சியினர் கூட்டணியை உறுதி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் தமிழக பாஜக மேலிட பொருப்பாளர் புயூஸ் கோயல் நேற்று அமமுக மற்றும் ஐஜேக கட்சி கூட்டணி உறுதி செய்தார்.

இந்தநிலையில் நாளை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் மோடி மற்றும் அமித்ஷா கலந்துக்கொள்ள உள்ளனர்

பிரதமர் வருகையை முன்னிட்டு ஐந்து அடுக்கு போலீஸ் பாதுகாப்பு பணியில் ஈடுட்டு வருகின்றனர் மூன்று நாட்களுக்கு டிரோன் கேமரா பறக்க தடைவிதிப்பு 3500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்

நேற்றைய தினத்தை தொடர்ந்து இரண்டாவது நாளாக ஹெலிகாப்டர் சோதனை நடத்தினர்.

செங்கல்பட்டு முதல் மதுராந்தகம் வரை சாலையில் இருபுறமும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் கட்சி கொடிகள் பேனர்கள் அமைக்கப்பட்டுள்ளது நாளை மாலை 3 மணிக்கு பிரதமர் மதுராந்தகம் வருகையால் விழாகோலம் பூண்டுள்ளது

# நடை பயிற்சி மேற்கொண்ட கல்லூரி மாணவனை கடத்தி ஜி.பே.வில் பணம் பறிப்பு

தாம்பரம் அடுத்த ஆதனூர் மாடம்பாக்கம் பகுதியைச் சார்ந்தவர் துரை (வயது 18) இவர் தனியார் கல்லூரியில் டி சி ஏ முதலாமாண்டு படித்து வருகிறார்.

தினம்தோறும் காலையில் நடை பயிற்சி மேற்கொள்வதை வழக்கமாக வைத்திருந்த துரை கடந்த 14ஆம் தேதி காலை 5 மணி அளவில் ஊரிலிருந்து ஆதனூரில் இருந்து ஒரத்தூர் நோக்கி செல்லும் சாலையில் நடை பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவர் அருகே வேகமாக கார் ஒன்று தடீரென காருக்குள் துரையை தூக்கி போட்டு அங்கிருந்து மின்னல் வேகத்தில் தப்பி சென்றது.

ஓட்டுனர் உட்பட காருக்குள் இருந்த நான்கு நபர்கள் சரமாரியாக தாக்கியதோடு அவரை மிரட்டி கல்லூரி எக்ஸாம் பீஸ் கட்டுவதற்காக அக்கவுண்டில் வைத்திருந்த 7900 ரூபாயை ஜி பெ மூலம் தனது அக்கவுண்டிற்கு மாற்றிக்.

அதுமட்டுமின்றி தங்க நகை, பாக்கெட்டில் பணம் எதவாக இருக்கிறதா என பார்த்துவிட்டு இதுவும் இல்லாததால் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இறக்கி விட்டு அங்கிருந்து தம்பி சென்றனர்.

நடந்த சம்பவத்தால் பதறிப்போன கல்லூரி மாணவன் மணிமங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் அடிப்படையில் மணிமங்கலம் குற்ற பிரிவு காவல் ஆய்வாளர் இளையராஜா விசாரணையை மேற்கொண்டார். ஜி பெ மூலம் பண பரிமாற்றம் செய்யப்பட்ட கணக்கின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டதில் கல்லூரி மாணவனை கடத்தி பணம் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்டது





திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்த சஞ்சய் (வயது25) திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த பிரதீப் குமார் (வயது 24) மாடம்பாக்கம் பகுதியில் சேர்ந்த முகமது ரியாசுதீன் (வயது 28) அதே பகுதியில் சார்ந்த பிரவீன் குமார் (வயது 27) என்பது தெரிய வந்தது

மணிமங்கலம் பகுதியில் காரில் அமர்ந்து மது அருந்து கொண்டிருந்த நான்கு பேரையும் காவல் நிலையம் அழைத்து வந்து தீவிரவாதி விசாரணைமேற்கொண்டனர்.

விசாரணையில் ஏற்கனவே பல வழக்குகளில் சிறை சென்ற பொழுது நான்கு பேருக்கும் நட்பு ஏற்பட்டு சிறையில் இருந்து வெளியே வந்து இதுபோன்று வழிப்பறியில் ஈடுபட்டு வந்தது தெரிய வந்தது...

மேலும் வழிப்பறிக்கு பயன்படுத்திய காரை பறிமுதல் செய்து நீதிபதி முன் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்

மணிமங்கலம், வாலாஜாபாத், படப்பை, ஆதனூர், போன்ற பகுதிகளில் வெளிமாநிலங்களில் இருந்தும் பிற மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான இளைஞர்கள் தங்கி பணிபுரிந்து வருகின்றனர்..

அவர்களை குறி வைத்து இது போன்ற வழிப்பறி சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுவதாக அப்போது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மேலும் ஆதனூர் பகுதியில் ரெட் சோன் என கண்டறியப்பட்டு புதிதாக கட்டப்பட்டு கைவிடப்பட்ட போலீஸ் பூத் பயன்பாட்டுக்கு கொண்டு வந்து அந்த பகுதியில் காவலர்களின் கண்காணிப்பை அதிகரிக்க வேண்டும் என பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

# உலகின் மிக நெரிசலான நகரங்கள்: 2வது இடத்தில் பெங்களூரு



பெங்களூரு,

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த 'டாம்டாம்' (TomTom) என்ற தொழில்நுட்ப நிறுவனம், 2025-ம் ஆண்டில் உலக அளவில் அதிக நெரிசலான நகரங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்த பட்டியலில், இந்தியாவின் தொழில்நுட்ப தலைநகரமான பெங்களூரு 2-வது இடத்தைப் பிடித்துள்ளது.

இதில் முதலாவது இடத்தில் மெக்சிகோ நாட்டின் தலைநகரான மெக்சிகோ சிட்டி உள்ளது. பெங்களூருவை தொடர்ந்து, 3-வது இடத்தில் அயர்லாந்து தலைநகரான டப்ளின் உள்ளது. இந்த பட்டியல் உலகம் முழுவதும் உள்ள நகரங்களில் இருக்கக்கூடிய சராசரி பயண நேரம் மற்றும் நெரிசல் நிலைகள் தொடர்பாக கடந்த 2025-ம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

பெங்களூருவில் சராசரி நெரிசல் அளவு 74.4 சதவீதம் என்று கூறப்பட்டுள்ளது.

இது முந்தைய ஆண்டை விட 1.7 சதவீதம் அதிகமாகும். பெங்களூருவில் 4.2 கி.மீ தூரத்தைக் கடக்க வாகன ஓட்டிகள் சராசரியாக 15 நிமிடங்கள் எடுத்துக் கொள்வதாகவும், 10 கி.மீ. தூரத்தைக் கடக்க சராசரியாக 36 நிமிடங்கள் எடுத்துக் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மே 17-ந்தேதி பெங்களூரு நகரத்தின் மிக மோசமான பயண நாளாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த நாளில் நெரிசல் அளவுகள் 101 சதவீதமாக உயர்ந்ததாகவும், இதனால் 2.5 கி.மீ தூரத்தைக் கடக்க 15 நிமிடங்கள் ஆனதாகவும் கூறப்பட்டுள்ளது.

பெங்களூருவைத் தவிர, உலகின் மிக நெரிசலமான நகரங்களின் பட்டியலில், முதல் 35 இடங்களில் மேலும் 6 இந்திய நகரங்கள் இடம்பெற்றுள்ளன. அதன்படி 5-வது இடத்தில் புனே, 18-வது இடத்தில் மும்பை, 23-வது இடத்தில் புதுடெல்லி, 29-வது இடத்தில் கொல்கத்தா, 30-வது இடத்தில் ஜெய்ப்பூர் மற்றும் 32-வது இடத்தில் சென்னை ஆகிய நகரங்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# கோவை பீளமேடு பகுதியில் உள்ள பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியில் நிறுவனர்கள் தினம் கொண்டாடப்பட்டது

## சிறப்பு விருந்தினராக தமிழக வனத்துறை கூடுதல் தலைமை செயலாளர் சுப்ரியா சாஹூ பங்கேற்பு




கோவை பீளமேடு பகுதியில் பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி அமைந்துள்ளது. இக்கல்லூரியின் நிறுவனர் தினவிழா நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக தமிழக அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், மற்றும் வனத்துறை கூடுதல் தலைமை செயலாளர் சுப்ரியா சாஹூ பங்கேற்று மாணவ மாணவிகள் மத்தியில் சிறப்பு ரையாற்றினார். ஜிஆர்ஜி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் ரங்கசாமி வரவேற்புரையாற்றினார். தலைமை விருந்தினராக ஈரோடு யுஆர்சி கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனதின் நிர்வாக இயக்குநர் தேவராஜன் சின்னுசாமி ஜிஆர்ஜி நினைவு பேருரையாற்றினார். இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக சென்னை, ரானே லிமிடெட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ,கௌரி கைலாசம், தொழில் மற்றும் சமூகத்திற்கு அவர் ஆற்றிய முன்மாதிரியான தலைமைத்துவம், மற்றும் மாற்றத்திற்கான பங்களிப்பை பாராட்டி அறக்கட்டளை சார்பில், 2026 ஆம் ஆண்டிற்கான சந்திரகாந்தி கேட்டலிஸ்ட் லீடர் விருது வழங்கப்பட்டது. தொடர்ந்து இந்தியாவின் டிஜிட்டல் மற்றும் தொழில் முனைவோர் துறையில் ஆற்றிய முன்னோடி பங்களிப்பிற்காக மேட்ரிமோனி டாட் காம் நிறுவனத்தின் நிறுவனர் முருகவேல் ஜானகி ராமனுக்கு, 2026 ஆம் ஆண்டிற்கான ஜி ஆர் ஜி ட்ரெயிபிளேசர் விருது வழங்கப்பட்டது. தொடர்ந்து பெண்களின் தலைமை துவத்திற்கான சந்திரகாந்தி ஃபெலோஷிப் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் முறையான வழிகாட்டுதல் மற்றும் தலைமைத்துவ மேம்பாட்டின் கீழ் எதிர்கால பெண் தலைவர்களை வளர்க்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட ஒரு முயற்சியாக அமைந்தது. ஹீரோ பின் கார்ப் லிமிடெட் நிறுவனத்தின் மூத்த கடன் ஒப்புதல் அதிகாரி ரமா மீனாட்சி, இந்திய அரசின் வருமான வரித்துறை துணை ஆணையர் லீனா அன்டோனென்ட் மரியா, மற்றும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ், அமெரிக்காவின் வணிக மதிப்பீடு காப்பீடு மற்றும் இடர் மேலாண்மை துணைத் தலைவர் புவனேஸ்வரி முரளி, ஜி ஆர் ஜி கல்லூரி பேராசிரியர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரோடு: பாஜக விவசாய அணி மாநிலத் தலைவர் முன்னிலையில் 'அம்மன் டெக்ஸ்' நமச்சிவாயத்திற்குச் சிறப்புப் பாராட்டு மற்றும் கௌரவிப்பு



ஈரோடு மாவட்டம் காளிங்கராயன்பாளையத்தில் நடைபெற்ற பாரதிய ஜனதா கட்சி தமிழ்நாடு விவசாய அணியின் பாராட்டு விழாவில், ஒரு நெகிழ்ச்சியான நிகழ்வாக ஈரோடு தெற்கு மாவட்ட விவசாய அணி துணைத்தலைவர் 'அம்மன் டெக்ஸ்' நமச்சிவாயம் அவர்களுக்குச் சிறப்பு கௌரவம் அளிக்கப்பட்டது.

அண்மையில் ஈரோட்டில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க விவசாயிகள் விழிப்புணர்வு மாநாடு, தமிழக அளவில் பெரும் கவனத்தை ஈர்த்தது. இந்த மாநாட்டின் வெற்றிக்காகத் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான நிர்வாகிகள் மற்றும் விவசாயிகள் வருகை தந்திருந்தனர். அவ்வாறு வருகை புரிந்த அனைத்து நிர்வாகிகளையும் கௌரவிக்கும் விதமாகவும், விவசாயத்தின் அடையாளமாகவும் திகழும் 'விவசாய துண்டுகளை' முன்னின்று ஏற்பாடு செய்து வழங்கியவர் ஈரோடு தெற்கு மாவட்ட விவசாயஅணிதுணைத்தலைவர் அம்மன் டெக்ஸ் நமச்சிவாயம் ஆவார்.

அவரது இந்த அர்ப்பணிப்புமிக்க பணியைப் பாராட்டும் வகையில், மாநிலத் தலைவர் நாகராஜ் தலைமையில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு மற்றும் பாராட்டு விழாவில், அவருக்குச் சிறப்புப்பாராட்டுத்தெரிவிக்கப்பட்டது. மாநிலத் தலைவர் நாகராஜ் அவர்கள், நமச்சிவாயம் அவர்களின் சேவையைப் பாராட்டி அவருக்குப் பயனாடை அணிவித்துக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வின் போது மாநிலச் செயலாளர் பன்னீர்செல்வம், பாஜக ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் எஸ்.எம்.செந்தில், விவசாய அணி மாவட்டத் தலைவர் சந்திரசேகரன், ஈரோடு தெற்கு மாவட்ட விவசாய அணி துணை தலைவர் நவநீதகிருஷ்ணன் மற்றும் தமிழகம் முழுவதிலும் இருந்து வந்திருந்த 400-க்கும் மேற்பட்ட முக்கிய நிர்வாகிகள் உடனிருந்து தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர். இந்தகௌரவிப்பு நிகழ்வு அங்கிருந்த கட்சித் தொண்டர்கள் மற்றும் விவசாய அணி நிர்வாகிகள் மத்தியில் மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது.





## சாலை பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு தலைக்கவசம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

ஈரோடு மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு வார விழாவினை முன்னிட்டு, பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வு பல்வேறு இடங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா அவர்களின் ஆணைக்கிணங்க, ஈரோடு சி.என்.சி (CNC) கல்லூரியில் மாணவ-மாணவியருக்கு ஹெல்மெட் அணிவதன் அவசியம்குறித்தவிழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

ஈரோடு வடக்கு போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர் ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இருசக்கர வாகனங்களை ஓட்டும்போது தரமான தலைக்கவசம் அணிவது எவ்வாறு உயிரைக் காக்கும் என்பது குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டது. விபத்து நேரங்களில் ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்க்கவும், பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யவும் மாணவர்கள் போக்குவரத்து விதிகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் சண்முகமூர்த்தி, சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரன், தலைமை காவலர் சத்யா மற்றும் போக்குவரத்து காவல்துறையினர் உட்பட கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் ஏராளமான மாணவ-மாணவியர் கலந்து கொண்டனர். மாணவர்களிடையே சாலைபாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, தமிழ்நாடு அரசின் "கிராமம் தோறும் புதுத்தொழில்" திட்டத்தின் கீழ், கிராமப்புற தொழில் முனைவோர்களை ஊக்குவித்து, நிலைத்த பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் (21.1.2026)அன்றுஈரோடுமாவட்டத்தில்"ஸ்டார்ட்அப்கிராமமாக"தாண்டம்பாளையம்கிராமத்தைதொடங்கிவைத்தார்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## கொடுமுடி பேரூராட்சி பகுதியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்




ஈரோடு மாவட்டம், கொடுமுடி பேரூராட்சி, ராம் மஹாலில் நேற்று (22.01.2026) நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம் 02.08.2025 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தினால் எண்ணற்ற பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் 33 மற்றும் 34-வது மருத்துவ முகாம் நேற்று 22.01.2026 கொடுமுடி, ராம் மஹால் மற்றும் பவானி சாகர் சாணக்கியா இன்டர்நேஷனல் பள்ளியிலும் நடைபெற்றது.

இம்மருத்துவ முகாம்களில் 34 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 20 மருத்துவர்கள் என மொத்தம் 54 மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளித்தார்கள். இம்முகாம்களில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் கண் பரிசோதனை, பல் சிகிச்சை, ரத்தப்பரிசோதனை, ECG, X-RAY பரிசோதனைகளும் கூடுதலாக பெண்களுக்கு கர்பப்பைவாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் செய்யப்பட்டது. மருத்துவர்கள் பரிசோதனை செய்து தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கி, மேல் சிகிச்சை தேவைப்படுவோருக்கு சிறப்பு மருத்துவர்களை கொண்டு பரிசோதனை செய்து ECHO போன்ற உயர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு. உயர் சிகிச்சை தேவைப்படுவோர் பரிந்துரை செய்யப்பட்டார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் இதுவரை 32 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளது. இந்த முகாம்களில் 44,204 பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை வழங்கப்பட்டது. 24,979 நபர்களுக்கும் ECG-ம், 29,594 நபர்களுக்கும் ஆய்வக பரிசோதனையும் 2,786 நபர்களுக்கும் X-RAY ம், 2,935 நபர்களுக்கும் Scan-ம், 3,266 நபர்களுக்கும் ECHO-ம், வழங்கப்பட்டுள்ளது.

இம்முகாமில்,மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கொடுமுடி ராம் மஹாலில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு 10 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களும், 3 நபர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்துப் பெட்டகங்களும், 5 நபர்களுக்கு சஞ்சீவி பெட்டகமும், 10 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை, என 28 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில்,மாவட்ட சுகாதார அலுவலர் மரு. அருணா, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## கொடுமுடி பேரூராட்சி பகுதியில் "உங்க கனவ சொல்லுங்க" விண்ணப்பபடிவங்களை தன்னார்வலர்கள் மூலம் திரும்ப பெறும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்




ஈரோடு மாவட்டம், கொடுமுடி பேரூராட்சி, மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் பகுதிகளில் நேற்று (22.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தின் முதன்மையான மூன்று தேவைகளையும் பூர்த்தி செய்த விண்ணப்பபடிவங்களை தன்னார்வலர்கள் மூலம் திரும்ப பெறும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பொதுமக்களுடைய தனிப்பட்ட கோரிக்கைகளுக்கு மட்டுமல்லாமல், பொதுப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு செல்லப்படும் வகையில் இத்திட்டம் செயல்படுகிறது.

நேற்றைய தினம் கொடுமுடி பேரூராட்சி 12வது வார்டு பாசுரார் வீதியில் மற்றும் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், கணபதிபாளையம், காமராஜர்புரம் ஆகிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் "உங்க கனவு சொல்லுங்க" விண்ணப்ப படிவத்தினை பொது மக்களிடம் வழங்கி முதன்மையான மூன்று தேவைகளையும் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை தன்னார்வலர்கள் மூலம் திரும்ப பெறும் பணியினை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், கொடுமுடி, பேரூராட்சி அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டு அங்கு பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், பணியாளர்கள் வருகை பதிவேடு, பேரூராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசு திட்டப்பணிகள். ஏலம் விடப்படும் விபரம், அறிவிப்புகள் விபரம். பேரூராட்சியில் வரி வசூல் விபரம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின் போது கொடுமுடி பேரூராட்சி செயல் அலுவலர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தார்கள்.

## குடும்ப அட்டைகளில் திருத்தம் மேற்கொள்ள முகாம் அறிவிப்பு!




சென்னையிலுள்ள 19 மண்டலங்களில் வருகின்ற ஜன. 24-ல் பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பொது விநியோகத் திட்டத்தின் பயன்களை குடிமக்கள் எளிதில் பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குறைதீர் முகாம் பிரதி மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது.

அதன்படி ஜனவரி 2026 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 19 மண்டல உதவி ஆணையாளர் அலுவலகங்களில் ஜன. 24-ல் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறவுள்ளது.

குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், கைபேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் உள்ளிட்ட பொது விநியோகத் திட்டம் தொடர்பான சேவைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், நியாய விலைக் கடைகளில் பொருள் பெற நேரில் வருகை தர இயலாத மூத்த குடிமக்கள் உள்ளிட்டோருக்கு அங்கீகாரச் சான்று வழங்கப்படும். பொது விநியோகக் கடைகளின் செயல்பாடுகள், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளில் குறைபாடுகள் குறித்த புகார்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை பொதுமக்கள் இம்முகாமில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னையிலுள்ள 19 மண்டல அலுவலகப் பகுதிகளில் உள்ள குடும்பஅட்டைதாரர்கள் இச்சேவையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு மீண்டும் டார்ச் லைட் சின்னம் ஒதுக்கீடு



தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது. இதையடுத்து கட்சிகள் சின்னம் கேட்டு தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை விடுத்த நிலையில் கட்சிகளுக்கு சின்னங்கள் ஒதுக்கப்பட்டு வருகின்றன. விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்திற்கு 'விசில்' சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோல கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு மீண்டும் 'டார்ச் லைட்' சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2019 மக்களவைத் தேர்தல், 2021 பேரவைத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் கட்சி தனித்துப் போட்டியிட்ட நிலையில் 2024 மக்களவைத் தேர்தலில் திமுகவுடன் கூட்டணியில் இணைந்தது. வரும் பேரவைத் தேர்தலிலும் மக்கள் நீதி மய்யம் திமுகவுடன் கூட்டணியில் போட்டியிடும் என்றே கூறப்படுகிறது. தொகுதிப் பங்கீட்டைப் பொருத்து மக்கள் நீதி மய்யம் எந்த சின்னத்தில் போட்டியிடும் என்று தெரியும்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.